**கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**
**கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் பொய்லர் இயக்குனர் (Boiler operator) பதவியின் III ஆம் தரத்தில் உள்ள பதவி வெற்றிடங்களின் பொருட்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

இத்திணைக்களத்தில் நிலவும் ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் பொய்லர் இயக்குனர் (Boiler operator) பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகைமை பெற்றுள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2018.09.21 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த.பெ.இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் தபாலிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "பொய்லர் இயக்குனர் (Boiler operator) பதவியின் பொருட்டு விண்ணப்பம் (திறந்த)" எனும் சொற்றொடரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

| | |
|---|---|
| 01. பதவி | : பொய்லர் இயக்குனர் (Boiler operator)III<br>இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.<br>*குறிப்பு* : ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு அமையவாகும் |
| 02. மாதாந்த சம்பளத் திட்டம | : ரூபா. **25,250-10x270-10x300-10 x330- 12 x350 - 38,450/-( PL-2 -2016)**<br>(சம்பளம் வழங்கப்படுவது, பொ.நி.சு.இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமையவாகும்) |
| 03. வயது எல்லை | : 2018.09.21 ஆம் திகதி அன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும். |
| 04. கல்வித் தகைமைகள் | : க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் |
| 05. தொழிற் தகைமைகள் | : பொய்லர் பொருட்டு தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். இல்லையேல் பொய்லராக சேவை சான்றிதழ் பரீட்சை ஒன்றின் மூலம் சித்தியடைந்து இருத்தல் |
| 06. அனுபவம் | : பொய்லர்களில் நடவடிக்கை மேற்கொள்வதன் பொருட்டு 03 வருட அனுபவம் இருத்தல். தடித்த கண்ணாடி, பொதியிடல் போன்ற புதிதாக பொருத்துதல் உட்பட சாதாரன திருத்த வேலைகள் மேற்கொள்ள இயலுமாகுதல் விஷேட தகைமையாகும். |
| 07. உடற்தகைமை | : நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக் கூடியதாக உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும். |
| 08. ஏனைய தகைமைகள் | i. விண்ணப்பகாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br>ii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் 2018.09.21 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும். |
| 09. ஆட்சேர்ப்பு முறை | : தொழில் பரீட்சிப்பின் பெறுபேற்றுக்கு அமையவும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேற்றிற்கு அமையவும் நிலவும் வெற்றிடத்தின் 100% நிரப்பப்படும். முதலாவது தொழிற்பரீட்சை நடாத்தப்படும். தொழிற்பரீட்சைக்கு அமரும் விண்ணபப்காரர் மத்தியில் வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு விண்ணப்பகாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர். தொழிற்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் பெறப்படுகின்ற புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையில் திறமை அடிப்படையில், நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் சேர்த்துக் கொள்ளப்படுவர் |

*** தொழிற் பரீட்சிப்பின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாரு புள்ளிகள் வழங்கப்படும் ***

| | விடயம் | உச்ச பள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| I | உரிய துறையில உள்ள ஆரம்பத் தகைமைகள் | 20 | 40% |
| II | உபகரணங்களை பொருத்துதல், புதுப்பித்தல் தொடர்பான அறிவு | 20 | |
| III | உரிய துறையில் உபகரணங்களின் இடையூறுகளை இனங் காண்பதற்கான அறிவை கொண்டிருத்தல் | 40 | |
| IV | உரிய துறையில உரிய உபகரணங்களை பயன்படுத்துதல் தொடர்பான அறிவு | 20 | |

*** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாரு புள்ளிகள் வழங்கப்படும் ***

| | பரீட்சித்து புள்ளி வழங்கப்படுகின்ற பிரதான வகுதிகள் | உச்ச புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| I | மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையது அன்று |
| II | மேலதிக தொழிற் தகைமை | 60 | |
| III | மேலதிக அனுபவம் | 10 | |
| IV | மேலதிக தகைமை | 10 | |
| V | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 05 | |

10 சேவை நிபந்தனைகள்

i. நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர் அரசாங்க கொள்கைத் திட்டங்களுக்கும், அரசாங்க சேகைள் அணைக்குழுவின் கட்டளைகளுக்கும், நடைமுறை ஒழுங்குவிதி, தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள், நிதிப்பிரமானம் மற்றும் அரசாங்கத்தினல் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற பிரமானங்கள் ஒழுங்கு விதிகள், அமைச்சு மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவர்.

ii. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அரசாங்க சேவையில் பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெறுவாறேயாயின் அவர் ஒரு வருட கால பதில் கடமை காலப் பகுதிக்கு உட்படுத்தப்படுவர். திறந்த போட்டிப் பரீட்சையின் ஊடாக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் உரிய முதலாவது தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழி மூலத்திற்கும் மேலதிகமாக, இரண்டாம் மொழி தொடர்பிலான தேர்ச்சியை சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டு 05 வருடத்தினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. திணைக்களத்தின் ஊடாக தீர்மானிக்கின்ற சேவை நிலையத்தில் கடமையை மேற்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் உரிய விண்ணப்பத்தை திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் அடிப்டைத் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் யாவும் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும்.

vii. இந்த வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் பிரச்சினை ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

டாக்டர் நிஹால் வெதசிங்க
கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.08.**16**
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
த.பெ.இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை.